00089

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பள்ளிச் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் - 2017 / 2018

**ESC 1139 / EPC1239** முன்பிள்ளை மற்றும் குழந்தைக் காப்பகத்தை ஒழுங்கமைத்தலும் முகாமைத்துவம் செய்தலும்

காலம் : 2 மணித்தியாலங்கள்

---

திகதி : 15.06.2019 | நேரம் : பி.ப 2.00 – பி.ப 04.00

---

முதலாம் பகுதியில் அனைத்து வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியில் ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் விடையளிக்குக.

## பகுதி 1

1. முன்பள்ளி முகாமைத்துவம் எனும் பதத்தினை சுருக்கமாக விளக்குக?
2. முன்பள்ளிக் கட்டடமொன்றின்றின் முக்கிய ஐந்து (05) கூறுகளைப் பட்டியலிடுக?
3. உங்களது முன்பள்ளி வளாகத்தில் நீங்கள் பிள்ளைகளை அழைத்துச் செல்லக்கூடிய ஐந்து (05) கற்றலுக்குரிய இடங்களைப் பெயரிடுக?
4. முன்பள்ளி ஒன்றில் நாளொன்றிற்காக நீங்கள் திட்டமிட்டுள்ள பொதுவான செயற்பாடுகள் மூன்றினைக் (3) குறிப்பிடுக?
5. முன்பள்ளி ஆசிரியர் ஒருவர் திட்டமிட்டுள்ள பொதுவான செயற்பாடுகளில் பெற்றோர்களின் பங்குபற்றலின் முக்கியத்துவத்தை சுருக்கமாக விபரிக்குக?
6. முன்பள்ளிப் பிள்ளைகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்காக நடைமுறைப்படுத்தப்படுகின்ற மூன்று (3) பதிவேட்டு வகைகளைக் குறிப்பிடுக?
7. முன்பள்ளிப் பாடசாலையொன்றில் " மணற்குழி" ஒன்றினை பராமரிப்பதன் முக்கியத்துவத்தினை சுருக்கமாக விளக்குக?
8. முன்பள்ளி ஒன்றிற்கான உள்ளக கற்றல் சூழலை நீர் எவ்வாறு ஒழுங்கமைப்பீர் என்பதனை சுருக்கமாக விளக்குக?

**(08x05=40புள்ளிகள்)**

## பகுதி II

9. i) முன்பள்ளி ஒன்றின் வாராந்த திட்டமிடல் என்பதனால் கருதப்படுவது என்ன? (05புள்ளிகள்)

ii) முன்பள்ளியொன்றினுடைய நாளாந்த செயற்பாடுகளை எவ்வாறு நீர் திட்டமிடுவீர் என்பதனை விளக்குக? (07புள்ளிகள்)

iii) முன்பள்ளியொன்றில் வாராந்த திட்டமிடலைப் பேணுவதன் முக்கியத்துவத்தை கலந்தாலோசிக்குக? (08புள்ளிகள்)

10. "முன்பள்ளி ஆசிரியர் முன்பள்ளியானது பிள்ளைகளுக்குப் பாதுகாப்பினை, பராமரிப்பினை வழங்கக்கூடிய இடம் என்பதனை உறுதிப்படுத்த வேண்டும்."

i) பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு என்பதால் கருதப்படுவது யாது? (10புள்ளிகள்)

ii) மேலே குறிப்பிட்ட கூற்றிற்கிணங்க முன்பள்ளியில் பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பினை உறுதிப்படுத்துவதில் முன்பள்ளி ஆசிரியரின் வகிபங்கினை உதாரணங்களினூடாக விளக்குக? (10புள்ளிகள்)

11. i) குழந்தைக் காப்பகத்திற்கான கட்டடத்தை 2-5 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளுக்காக நிர்மாணிக்கும் போது எவ்வாறு ஒழுங்கமைப்பீர் என்பதனை விளக்குக? (10புள்ளிகள்)

ii) குழந்தைக் காப்பகம் ஒன்றினுடைய பராமரிப்பு வழங்குனரின் பிரதான பொறுப்புக்களை பொருத்தமான உதாரணங்களினூடாக விளக்குக ? (10புள்ளிகள்)

12. i) உமது முன்பள்ளிப் பாடசாலையின் அனுமதிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள பிள்ளைகளின் பெற்றோருடன் முதல் சந்திப்பினை எவ்வாறு ஒழுங்குபடுத்துவீர் என விபரிக்குக? (08புள்ளிகள்)

ii) பெற்றோருடனான முதல் சந்திப்பில் நீர் பேச முனையும் ஐந்து (05) விடயங்களைப் பட்டியற்படுத்துக? (05புள்ளிகள்)

iii) மேலே நீர் குறிப்பிட்ட விடயங்களுள் ஒன்றினை தெரிவுசெய்து அதனுடைய முக்கியமான அம்சங்களை விபரிக்குக? (07புள்ளிகள்)

13. i) முன்பள்ளி வகுப்பொன்றில் பிள்ளைகளைக் குழுவாக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் நான்கினை (04) விளக்குக? (08 புள்ளிகள்)

ii) "எங்களால் பார்க்கக்கூடிய வானம்" என்ற கருப்பொருளின் அடிப்படையில் குழுக்கள் முறையில் பிள்ளைகளுக்கு கற்பிக்க முடியுமான செயற்பாடு ஒன்றினை முன்வைக்குக. அதனுடன் அச் செயற்பாடு ஒரு குழுச் செயற்பாட்டு முறையாக எவ்வாறு நிகழ்த்தப்படும் என்பதனை உதாரணங்களினூடாக விளக்குக ? (12புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது